**பகுதி -அ (SECTION-A)** 40 MARKS

**1. பின்வரும் பத்தியைப் படித்து கொடுக்கப்பட்டுள்ள பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கேற்ற விடை எழுதுக** **5 × 1 = 5**

அ) சிலி நாட்டில் ஒரு சுரங்கம் அது பூமிக்கடியில் ஈராயிரம் அடி ஆழம் உடையது தங்கமும் தாமிரமும் எடுப்பதற்காக வெட்டப்பட்ட சுரங்கம் அது அங்கு ஒரு நாள் பெரிய விபத்து நேர்ந்தது. கீழே சுரங்கத்தில் வேலை செய்த முப்பத்து மூன்று தொழிலாளர்கள் மேலே வர இயலாதவாறு சுரங்கம் இடிந்து மண் மூடியது அறுபத்தொன்பது நாட்கள் போராட்டம் .சிலி நாட்டு அரசின் அனைத்து துறைகளும் அவர்களை வெளிக் கொணர பெரிதும் முயன்றன. உள்ளே சிக்கிக் கொண்டவர்கள் சூரியனை காணாது நாளும் அல்லல்பட்டாலும் மனந்தளராது இருந்தனர் .பூமியில் மேலிருந்து துளை போட்டு அதன் வழியே உணவும் மருந்தும் அவர்களுக்கு அனுப்பப்பட்டன. உள்ளே இருந்தவர்கள் மனம் தளராது முறையாக அவற்றை பங்கிட்டு உண்டு வெளியே வர காத்திருந்தனர். அவர்களை மீட்க பெருந்துளை போட்டு அதன் வழியே மீட்புக் குழாயை மீட்புப் படையினர் அனுப்பினர். சுரங்கத்தில் உள்ள ஒவ்வொருவரும் துணிவுடன் பயப்படாது விரைவு காட்டாது ஒருவர் பின் ஒருவராக வெளியே வந்தனர். சிலிநாட்டு அதிபர் அங்கு காத்திருந்து அவர்களை வரவேற்றார் .சிலி நாட்டு சுரங்கப் பணியாளர்கள் மீட்கப்பட்ட அருஞ்செயல் மண்ணில் மகத்தானசாதனையாகும்.

வினாக்கள்

1.தொழிலாளர்கள் எத்தனை பேர்?

அ) முப்பது ஆ) முப்பத்து மூன்று இ) முப்பத்தொன்பது ஈ)முப்பத்தாறு

2.சுரங்கத்தில் சிக்கிக் கொண்டவர்கள் எதனை காணாது அல்லல் பட்டனர்?

அ) பூமி ஆ) சூரியன் இ) சந்திரன் ஈ) விண்மீன்

3.எவற்றை எடுப்பதற்காகச் சுரங்கம் வெட்டப்பட்டது?

அ) தாமிரம், இரும்பு ஆ) தங்கம் ,தாமிரம்

இ) தாமிரம், பித்தளை ஈ) தங்கம் இரும்பு

4.சுரங்கத்தின் ஆழம் எவ்வளவு?

அ) மூவாயிரம் அடி ஆ) நாலாயிரம் அடி இ) ஆயிரம் அடி ஈ) ஈராயிரம்அடி

5.தொழிலாளர்களை காத்திருந்து வரவேற்றவர் யார் ?

அ) சிலி நாட்டு மன்னர் ஆ) சிலி நாட்டு அதிபர்

இ) சிலி நாட்டு அரசர் ஈ) சிலி நாட்டு தொழிலாளர்

(அல்லது)

ஆ) இந்தியன் இரயில்வே உலகின் மிகப்பெரிய நிர்வாக அமைப்பாகும். ஆண்டுதோறும் நான்காவது சுமார் 7 பில்லியன் மக்கள் பயணம் மேற்கொள்கின்றனர். 350 மில்லியன்டன் சரக்குகள் கையாளப்படுகின்றன. இந்தியாவில் 1853ஆம் ஆண்டு இரயில் சேவை

தொடங்கப்பட்டாலும் 1951 ஆம் ஆண்டு "இந்தியன் ரயில்வே " என்ற அமைப்பாகி நாட்டுடைமை ஆக்கப்பட்டன. ஏறத்தாழ பத்துலட்சம் நேரடிப்பணியாளர்களையும் ஆறுலட்சம் மறைமுகப் பணியாளர்களுக்கும் வேலை வாய்ப்பளிப்பது இந்தியன் இரயில்வே துறையாகும். இந்தியாவின் தென்கோடியில் உள்ளது கன்னியாகுமரி இரயில் நிலையம் வடகோடியில் உள்ளது. பாரா முல்லா இரயில் நிலையம். கிழக்கு கோடியில் உள்ளது. அஸ்ஸாமில் உள்ள லோகாபானி நிலையம் மேற்குக்கோடியில் உள்ளது .குஜரத்கட்சில் உள்ள நாலியா இரயில் நிலையம் ஆகும்

வினாக்கள் :

1.இந்தியன் ரயில்வே நாட்டுடைமை ஆக்கப்பட்டது எப்போது?

(அ) 1947 ஆம் ஆண்டு (ஆ) 1853 ஆம் ஆண்டு

இ)1951 ஆம் ஆண்டு (ஈ) 1877 ஆம் ஆண்டு

(2) இந்தியாவின் வடகோடியில் உள்ள ரயில்நிலையம் எது ?

(அ) லோகாபனி இரயில்நிலையம் (ஆ) கன்னியாகுமரி இரயில்நிலையம்

(இ) பாராமுல்லா இரயில்நிலையம் ஈ) மும்பை இரயில்நிலையம்

3. இந்தியன் இரயில்வேத் துறையில் பணியாற்றும் நேர்முகப் பணியாளர்கள் எத்தனைபேர் ?

(அ) ஆறுலட்சம் (ஆ) பத்துலட்சம்

(இ) நான்குலட்சம் (ஈ) ஒன்பதுலட்சம்

(iv) குஜராத்கட்சில் உள்ள இரயில் நிலையத்தின் பெயர் யாது?

(அ) நாலியா (ஆ) லோகாபானி (இ) கன்னியாகுமரி (ஈ) சென்னை எழும்பூர்

V.*உலகில் இந்தியன் ரயில்வே துறை வகிக்கும் இடம் எது ?*

*அ) முதலாவது ஆ).நான்காவது இ).இரண்டாவது ஈ).மூன்றாவது.*

**2. பின்வரும் பத்தியைப் படித்து கொடுக்கப்பட்டுள்ள பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கேற்ற விடை எழுதுக** **1×5=5**

அ) இன்றுள்ள சங்கநூல்களுள் தொல்காப்பியமே தொன்மையானதாக விளங்குகின்றது .தொன்மைக்காலத்தில் இருந்த தமிழ்நூல் வகைகளையும் செய்யுள் வகைகளையும் உலக வழக்காகிய நெறிமுறைகளையும் அறிவதற்குரிய சிறந்த கலைக்களஞ்சியமாக இந்நூல் அமைந்திலங்குகின்றது.இஃது ஒரு பால் தமிழ் இலக்கியத்தை வரையறுத்து வகைப்படுத்துவதோடு,பிறிதொருபால் தன் காலச் சமுதாயத்தை அறியச் சிறந்தகாலக் கண்ணாடியாக விளங்குகின்றது. தொல்காப்பியத்தின் மகுடமாக விளங்கும் பொருளதிகாரம் தொன்மைக்கால மக்களின் வாழ்வியலை வகுத்துக்காட்டும் கருவூலமாகத் திகழ்கின்றது. தமிழர் பண்பாட்டைப் பாருக்குப் பறைசாற்றும் பண்டாரமாகவும் விளங்குகின்றது .இயலுக்கு இலக்கணம் கண்ட தோடன்றி வாழ்வியலுக்கும் இலக்கணம் கண்ட தொன்மைநூல் தொல்காப்பியமாகும்.

**வினாக்கள்**

1. சங்க நூல்களில் தொன்மையான இலக்கியம் --------------

அ) சிலப்பதிகாரம் ஆ) தொல்காப்பியம் இ) குண்டலகேசி ஈ) மணிமேகலை

2.தொல்காப்பியம் ------------------ என வழங்கப்படுகிறது.

அ) வரலாற்றுநூல் ஆ) காலக்கண்ணாடி இ) அறிவியல்நூல் ஈ) கலைப்புத்தகம்

3. தொல்காப்பியத்தின் மணிமகுடம் ---------------

அ) தண்டியலங்காரம் ஆ) மரபியல்இ) பொருளதிகாரம் ஈ) அறத்துப்பால்

4. தொல்காப்பியம் பறைசாற்றுவது ---------------------

அ) இந்தியப் பொருளாதாரம்　　ஆ) தமிழர்பண்பாடு
இ) மேலைநாட்டுப் பயணங்கள்　　ஈ) வரலாற்றுக்குறிப்புகள்

5. தொல்காப்பியத்தில் காணப்பெறும் குறிப்புகள்-----------

அ) பூமி பற்றியது ஆ) மக்கள் பற்றியது இ) கல்வி பற்றியது ஈ) வாழ்வியல் பற்றியது

(அல்லது)

ஆ.பின்வரும் பத்தியைப் படித்து கொடுக்கப்பட்டுள்ள பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கேற்ற விடை எழுதுக　1×5=5

தென் அமெரிக்காவில் பெருவைச் சார்ந்த பாலை வனம் உள்ளது. இப்பாலை வனம் சஹாரா பாலை வனத்தினைப் போலப் பரந்திருந்தாலும் இங்கு மணலைப் பாக்க முடியாது. செம்மண் தரையாகவும் பழுப்பு நிற நிலமாகவும் காட்சியளிக்கிறது. இப்பாலை வனம். ஹெலிகாப்டரில் இருந்து பார்த்தால் ஸ்கேல் வைத்துப் பல கிலோமீட்டர் குறுக்கும் நெடுக்குமாக இழுக்கப்பட்டுக் காணப்படும் கோடுகளைப் பார்க்கும் போது வியப்பாகவும் மலைப்பாகவும் இருக்கும். காற்றிலும் மழையிலும் இந்த உருவக்கோடுகள் அழியாமல் இருப்பது மிகப்பெரிய விந்தை . ஆராய்ச்சியாளர்களின் கணக்குப்படி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பெருவில் வாழ்ந்த நாஸ்கா எனும் வம்சத்தினர் இக்கோடுகளை வரைந்திருப்பர் என்பது முடிவாகும். நாஸ்கா மக்கள் இவ்வடிவ கோடுகளை ஏன் வரைந்தனர் ? இரண்டாயிரம் ஆண்டுகள் ஆனபோதும் இக்கோடுகள் அழியாமல் புத்தம் புதிதாகக் காட்சியளிப்பது எப்படி? என்பது புரியாத புதிராக உள்ளது .மறுக்க முடியாத உண்மையாக அறிவியல் அறிஞர்களுக்குச் சவால்விட்டுக் கொண்டிருக்கின்றன இக்கோடுகள்.

**வினாக்கள்**

i கோடுகள் எத்தனை ஆண்டுகளுக்கு முன் வரையப்பட்டிருக்கலாம் என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர் ?

(அ ) பத்தாயிரம் ஆண்டுகள்　　(ஆ) நான்காயிரம் ஆண்டுகள்
(இ) ஆயிரம் ஆண்டுகள்　　(ஈ)இரண்டாயிரம் ஆண்டுகள்

ii) பெரு எந்தநாட்டில் உள்ளது ?

(அ) ஆப்பிரிக்காவில்　　ஆ) ஆசியாவில்
இ) வடஅமெரிக்காவில்　　ஈ)தென்அமெரிக்காவில்

iii) நாஸ்கா இனத்தவர் எந்நாட்டைச் சார்ந்தவர்களாவர் ?

(அ) இந்தியநாடு　(ஆ) ஆப்பிரிக்கநாடு　இ) ஆப்கானிஸ்தான் (ஈ) பெருநாடு

iv) பாலைவனம் எவ்வாறு காட்சியளிக்கிறது ?

அ) மணற்பகுதியாக　　(ஆ) புல்வெளியாக
(இ) செம்மண் தரையாகவும் பழுப்பு நிறமாகவும்　　(ஈ) ஏரிபோல

(v) நம்பமுடியாத விந்தை எது ?

(அ) பலகிலோ மீட்டர் அளவுக்கு வரையப்பட்ட கோடுகள்
(ஆ) இரண்டாயிரம் ஆண்டுகளாகியும் புத்தம் புதிதாகக் காட்சியளிப்பவை
(இ) அறிவியல் அறிஞரின் ஆராய்ச்சி
ஈ) இக்கோடுகள் எவர்களுக்குச் சவால்விடுகின்றன ? என்ற உண்மை.

3.சான்று தருக (எவையேனும் நான்கிற்கு மட்டும்)　4

i.வினைத்தொகை

அ) வீசுதென்றல் ஆ) சாரைப்பாம்பு　இ) மலர்க்கை ஈ) வட்டத்தொட்டி

ii.பெயரெச்சத்தொடர் ------

அ) பாடினாள் கண்ணகி ஆ) வந்து சென்றான்
இ) கேட்ட பாடல்　　ஈ) படித்தான் பாலன்

iii) முதனிலைத்திரிந்த தொழிற்பெயர்

அ) உதை ஆ) கேடு இ) அடி ஈ) தட்டு

iv. பண்புத்தொகை

அ) செங்காந்தள் ஆ) மார்கழித் திங்கள் இ) அண்ணன் தம்பி ஈ) கொல்களிறு

v. சொல்லிசை அளபெடை

அ) கெழீஇய ஆ மரூஉ இ) எஃஃகுகிலங்கிய ஈ) கெடுப்பதூஉம்

**4.கூறியவாறு செய்க** (எவையேனும் நான்கிற்கு மட்டும்) 4

i.செங்கடல் ( எவ்வகைப் பண்புப்பெயர் )

அ) நிறம் ஆ) சுவை இ) அளவு ஈ) பண்பு

ii. வந்தான் முருகன் (பெயரெச்சமாக்குக )

அ) வருவான் முருகன் ஆ முருகன் வந்தான்

இ) வந்த முருகன் ஈ) முருகன் வருவான்

iii ஆடினாள் (தொழிற்பெயராக்குக)

அ) ஆடு ஆ) ஆடினான் இ) ஆடுதல் ஈ) அடி

iv. கெடு (முதனிலைத் திரிந்த தொழிற்பெயராக்குக)

அ) கெட்டவன் ஆ) கேடு இ) கெடுதல் ஈ) கேடுதல்

v.கண்ணகி படித்த மாணவி (தனிமொழியாக்குக)

அ) .கண்ணகி படித்தாள் ஆ) .கண்ணகி மாணவி

இ) படித்த கண்ணகி ஈ) கண்ணகி

**5. இலக்கண குறிப்பு தருக** (எவையேனும் நான்கிற்கு மட்டும்) **4**

i.சூடு

அ) விகுதி பெற்ற தொழிற்பெயர் ஆ) எதிர்மறைத் தொழிற்பெயர்

இ) முதனிலைத் தொழிற்பெயர் ஈ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்

ii .கட்டுரையைப் படித்தேன்

அ) வினையெச்சத்தொடர் ஆ) வேற்றுமைத்தொடர்

இ) பெயரெச்சத்தொடர் ஈ) வினைமுற்றுத்தொடர்

iii. அண்ணன் வந்தார் -

அ) வினையெச்சத்தொடர் ஆ) பெயரெச்சத்தொடர்

இ) வினைமுற்றுத்தொடர் ஈ) உரிச்சொல்தொடர்

iv. பைங்கொடி பேசினாள்

அ) அன்மொழித்தொகை ஆ) உம்மைத்தொகை

இ) உவமைத்தொகை ஈ) பண்புத்தொகை

v. எங்கிறைவன்

அ) இன்னிசை அளபெடை ஆ) சொல்லிசை அளபெடை

இ) செய்யுளிசை அளபெடை ஈ) ஒற்றளபெடை

**6. நிரப்புக (அனைத்து வினாக்களுக்கும் விடையளி)** **4**

i காலம் கரந்த பெயரெச்சம் -------

அ) அன்மொழித்தொகை ஆ) வினைத்தொகை

இ) உவமைத்தொகை ஈ) பண்புத்தொகை

ii. முற்றுப் பெறாத வினை , பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிவது ---------- எனப்படும்.

அ) பெயரெச்சத்தொடர் ஆ) வினையெச்சத்தொடர்

இ) வினைமுற்றுத்தொடர் ஈ) இடைச்சொல் தொடர்

iii உயிரளபெடை ----- வகைபடும்

அ) 5 ஆ)3 இ)8 ஈ)2

iv.செய்யுளிசை அளபெடைக்கு வேறு பெயர் ----

அ)) இன்னிசை அளபெடை ஆ) சொல்லிசை அளபெடை

இ) செய்யுளிசை அளபெடை ஈ) இசைநிறை அளபெடை

**7.பின்வரும்செய்யுட் பகுதியைப் படித்து கொடுக்கப்பட்டுள்ள பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கேற்ற விடை எழுதுக எழுதுக:-** 5x1=5

தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கண் முழவி னேங்கக் குவளை கண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகரயாழின்
வண்டுக ளினிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ

**வினாக்கள்**

i.குளிர்ந் சோலையில் ஆடியது எது ?
அ) மேகங்கள் ஆ) அலை இ) மயில் ஈ) மரங்கள்
ii.கொண்டல் என்பதன் பொருள்?
அ)விளக்கு ஆ) மத்தள ஒலி இ) அலை ஈ) மேகம்
iii.மேற்கண்டபாடலில் குறிப்பிடப்படும் நிலம்?
அ) குறிஞ்சி ஆ) முல்லை இ)மருதம் ஈ) பாலை
iv.இப்பாடல் இடம்பெற்றுள்ளப் பகுதி -----
அ) பெரியபுராணம் ஆ) கம்பராமாயணம் இ)முல்லப்பாட்டு ஈ) பரிபாடல்
v.இப்பாடல் அமைந்துள்ள படலம் --------
அ) பாலகாண்டம் ஆ) அயோத்திய காண்டம் இ) யுத்தகாண்டம் ஈ) ஆரண்யகாண்டம்

**8 . பின்வரும் பகுதியைப் படித்து கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடையை எழுதுக.** 5x1=5

ஒரு மொழி பொது மக்களாலும் அதன் இலக்கியம், புலமக்களாலும் அமையப்பெறும் தமிழ்ப் பொதுமக்கள் உயர்ந்த பகுத்தறிவு உடையோர்.தமிழ்நாடு எத்துணைப் பொருள்வளமுடையது என்பது அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும். பிற நாடுகளிலுள்ள கூலங்களெல்லாம் சிலவாகவும் சில வகைப்பட்டனவாகவுமிருக்க தமிழ்நாட்டிலுள்ளவையோ,பலவாகவும் கழிபல வகைப்பட்டனவாகவும் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக கோதுமையை எடுத்துக்கொள்ளின் அதில் சம்பா கோதுமை, குண்டுக் கோதுமை, வாற்கோதுமை முதலிய சிலவகைகள் உண்டு. ஆனால் தமிழ்நாட்டு நெல்லிலோ, செந்நெல், வெண்ணெல், கார்நெல் என்றும் சம்பா. மட்டை, கார் என்றும் பல வகைகள் இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன்சம்பா, குண்டுச்சம்பா, குதிரைவாலிச்சம்பா, சிறுமணிச்சம்பா,சீரகச்சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன.இவற்றோடு வரகு, காடைக்கண்ணி,குதிரைவாலி முதலிய சிறு கூலங்கள் தமிழ்நாட்டிலன்றி வேறெங்கும் விளைவதில்லை. தமிழ்நாட்டிலும் தென்நாட்டிலேயே அவை விளைகின்றன

வினாக்கள்:

i. கூலம் என்பதன் பொருள் யாது ?
ii. கோதுமையின் வகைகள் யாவை ?
iii. சம்பாவின் வகைகள் எத்தனை ?
iv. தென்னாட்டில் விளைபவை எவை ?
v. மொழியும் இலக்கியமும் யாரால் அமையப் பெறும் ?

**9.பின்வரும் குறட்பாக்களை சரியான சீர்களால் நிரப்புக** **4**

i. இன்மையின் ........ தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது
அ) பொருமை ஆ, இல்லாமை இ,இல்லாரை ஈ)இன்னாத
2.குன்றேறி யானைப்போர் கண்டற்றால்........
றுண்டாகச் செய்வான் வினை

அ) தன்னிடம் ஆ.தன்கைத்தொன் இ. சுற்றும் ஈ. வாழ்வானை
3.அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை. -.........தரும்
அ.உயற்சி ஆ. முயற்சி இபுகுத்தி ஈ இலானும்
4. எப்பொருள்........ தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு
அ.வெகுளி ஆஎல்லாம் இஎத்தன்மை ஈ எய்துவர்

**10.செய்யுள் வினாக்கள்** 2 *3=6

1.பரிப் பாடல் கூறும் உயிர் வாழ ஏற்ற சூழலை விளக்குக
2.கோசல நாட்டின் சிறப்பை கம்பர் வழி விளக்குக

**11.உரைநடை வினாக்கள்** 3*4=12


1.கெட்டுப்போன காய்கனி வகைகளை எழுதுக
2.சோலை காற்றும் மின்விசிறியும் உரையாடுவது போல எழுதுக
3. இலை வகைளை எழுதுக

**12. துணைப் பாடம்** (7)

புயலிலே ஒரு தோணி

**13.கொடுக்கப்பட்டுள்ள காட்சியைக் கண்டு கவினுற எழுதுக** 3





**14.எதேனும் ஒரு கடிதம் எழுதுக** 6

அ.மழை நீர் சேமிப்பின் அவசியத்தை வலியுறுத்து நண்பனுக்கு /தோழிக்கு கடிதம் வரைக
ஆ. நிவர்புயலால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு உரிய நிவாரணம் வேண்டி கடிதம் வேண்டி மாவட்ட ஆட்சியருக்கு கடிதம எழுதுக
( **உனது முகவரி : ம.முகிலன் / ம.மேகலா எண்: 8 கம்பர் வீதி தஞ்சாவூர் 634125)**
இ) ஆழ்துளை கிணறு அமைக்கவேண்டி மாவட்ட ஆட்சியருக்கு மின்னஞ்சல் அனுப்புக
**உனது முகவரி** : வளவன்@ஜிமெயில்.காம்

**15.குறிப்புகளைக் கொண்டு ஏதேனும் ஒன்றிற்கு கட்டுரை வரைக** 6

1 முன்னுரை- அறிவியல் வளர்ச்சியும் மனிதனும் - ஊடகங்களும் அவற்றின் கடமைகளும் நல்வாழ்வுக்கு வழிகாட்ட ஊடகங்களின் பணி-நாட்டு நலனில் கவனத்துடன் ஊடகங்கள் செயல்படுதல்- தீமைகளை நீக்கி அறிவை வளர்க்க - ஊடகங்கள் உதவுதல்,- முடிவுரை.

2. முன்னுரை - இளைய சமுதாயம் - சமுதாயத் தொண்டு - மாணவப் பருவத்தின் பயன்பாடுகள் சமூகச் சிந்தனைகள் - சாரண சாரணியர் - செஞ்சிலுவைச் சங்கம் உறுப்பினராதல் – நாட்டு நலப்பணிகள் செய்தல்- முடிவுரை.

3.முன்னுரை- இன்றைய வாழ்வு -இன்பம துன்பம் மனித வாழ்வு - நல்வழியில் பொருளீட்டல்- வரவு செலவு எழுதுன் பழக்கம் - எறும்பு மழைகாலம் -ஆடம்பர வாழ்வு- கூடாது -முடிவுரை.